அவதானக் குறிப்பு

CGAP Advancing financial access for the world's poor



# மிகவும் வறியவர்களாக இருப்போரை நுண்நிதித் துறைக்கு முன்னேற்றுதல்

## பாதுகாப்பு வலையமைப்புக்களையும் நிதிசார் சேவைகளையும் இணைத்தல்.

வறியவர்களுக்கு ஆதரவளிப்பதற்கான ஆலோசனைக் குழுவானது CGAP நுண்நிதிக்கு ஆதரவளிக்கும் 33 அபிவிருத்தி முகவர் நிலையங்களின் ஒன்றியமாகும். மேலதிகத் தகவல்களை www.cgap.org என்ற இணைய தளத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்

இந்த அவதானக் குறிப்பின் ஆக்கியோன்கள் CGAP இன் சிரேஷ்ட நுண்நிதி நிபுணர் ஸையித் ஹஷீமியும் CGAP இன் சிரேஷ்ட ஆலோசகர் ரிச்சர்ட் ரோசன்பேர்க்கும் ஆவர்.

மொழிபெயர்ப்பு: GTZ-ProMiS நிகழ்ச்சித்திட்டம்

Ministry of Finance and Planning

gtz

COOPERATION SRI LANKA

# அவதானக் குறிப்பு

இல. 34 பெப்ரவரி 2006

## மிகவும் வறியவர்களாக இருப்போரை நுண்நிதித் துறைக்கு முன்னேற்றுதல்: பாதுகாப்பு வலையமைப்புக்களையும் நிதிசார் சேவைகளையும் இணைத்தல்.

### மிகவும் வறியவர்களாக இருப்பவர்களை நுண்நிதி சென்றடைகின்றதா?

நுண்நிதி – அல்லது வறியவர்களுக்கான முறை சார்ந்த நிதிசார் சேவைகள் - தமது சொந்த வழியில், நிலைபேறான விதத்தில் வறுமைக்கெதிராக போராடுவதற்கு மக்களுக்கு உதவி செய்கின்றது. ஏழை மக்கள் கடன்கள், வைப்புக்கள் மற்றும் ஏனைய நிதிசார் சேவைகளை தாங்கள் இக்கட்டுக்கு உள்ளாகும் நிலைமையை குறைத்துக் கொள்வதற்கும் வாய்ப்புகளைப் பற்றிப் பிடிப்பதற்கும் தமது வருமானங்களை அதிகரிக்கவும் பயன்படுத்துகின்றனர். மறைமுகமாக நுண்நிதியானது பாடசாலைக்கல்வி, சுகாதாரம் மற்றும் பெண்களுக்கு வலுவூட்டல்[1] முதலானவற்றை மேம்படுத்துகின்றது. அநேகமான நிலைமைகளில் எவ்வாறாயினும் நுண்நிதியானது சமூகப் பொருளாதார அளவுகோலின் மிகவும் அடிமட்டத்திலுள்ள – "மிகவும் வறியவர்களாக" இருப்பவர்களை சென்றடைவதில்லை.

இன்று மிகவும் வறிய மக்களுக்காகவே நுண்நிதியுள்ளதா என்பது தொடர்பாக பெரும் விவாதங்கள் ஏற்பட்டுள்ளன. ஒரு நாளைக்கு ஒரு அமெரிக்க டொலருக்கும் குறைவாக (மிகவும் வறியவர்கள்) வாழ்க்கை நடத்துகின்ற பல இலட்சக் கணக்கான மக்களுக்கு ஏற்கனவே நுண்நிதி நிறுவனங்கள் (MFI) சேவை புரிகின்றனர். ஆயினும் மிகச் சிறியளவான நுண்நிதி நிறுவனங்களே தமது சொந்த நாடுகளிலுள்ள[2] வறுமை அளவுகோலின் அடிமட்டத்திலிருக்கின்ற மிகவும் வறிய வாடிக்கையாளர்களை எட்டுவதில் அவதானம் செலுத்துகின்ற நுண்நிதி நிறுவனங்களின் விடயங்களிலும்கூட மிகக் கணிசமான தொகையினராகவுள்ள மக்கள் அதில் பங்கேற்க முடியாதவாறு கூடுதலாக வறுமையில் வாடுபவர்களாகவுள்ளனர். உதாரணமாக பங்களாதேசில் மிகவும் வறிய மக்களுக்கு சேவை புரிதலில் கூடுதலாக அவதானத்தைக் கொண்டு உள்ள வறிய மக்கள் தரவரிசை குழுவின் மத்தியிலேயே நுண்நிதி நிறுவனங்களின் நாட்டம் கூடுதலாகவுள்ளது. மிகவும் நுண்நிதி தரவரிசையில் அது மிகவும் தாழ்வாகவேயுள்ளது. நுண் நிதிச் சேவைகள் மிகவும் வறிய சமூகங்களை நோக்கமாகக் கொண்டு இருக்கவில்லை.[3] ஏன் இவ்வாறு உள்ளது?

ஆகவும் கூடுதலாக வறியவர்களாகவுள்ள மக்கள் கடன் எடுக்க விரும்பாததற்கான ஒரு காரணம் கடன் பளுவானது அவர்களுக்கு உதவுவதற்குப் பதிலாக தீங்கு விளைவிக்கும் என்றே நினைக்கின்றார்கள். ஒரு பெண் அவளுக்கு நம்பகரமான ஒரு வருமான வழியில்லாதிருப்பின் வழமையான வாராந்த ரீதியாகவோ அல்லது மாதாந்த ரீதியாகவோ கொடுப்பனவுகளை கொடுப்பதற்கு தன்னை உடன்படுத்திக் கொள்வதன் மூலம் இக்கட்டுக்குள்ளாகும் நிலைமையைக் குறைப்பதற்குப் பதிலாக அதிலே சிக்கிக் கொள்ளும் வாய்ப்பை கூடுதலாக்கும் என்றே அவள் நினைக்கின்றாள். புதியதொரு நுண் வியாபார மொன்றில் கடனிலிருந்து பெற்ற முதலீட்டினால் பெறப்படும் இலாபம் அதிகரித்து அவளது வரு மானத்தை ஸ்திரப்படுத்தக்கூடியதுமாக இருப்பினும் இந்த முதலீடானது ஒரு ஆபத்தான யோசனையாக இருப்பதற்கான காரணம் பெருமளவு விகிதத்திலான நுண் வியாபாரங்கள் ஆரம்பித்த மாத்திரத்திலேயே தோல்வியை அடைகின்றன. இதனை உணர்ந்தே பெரும்பாலான ஏழைமக்கள் கடன் ஒன்றை பெறாமலேயே தமது வாழ்க்கை ஆபத்துக்கு ஏற்கனவே உள்ளாகி இருப்பதாக முடிவு செய்கின்றனர். விவாதநோக்கில் பார்க்கும்போது இவ்வாறான அச்சங்கள் யதார்த்தத்தை விட நம்பிக்கை தொடர்பானதாகவே இருக்கின்றன. ஆனால் தமது சொந்த சூழ்நிலையில் உரிய மக்களே அதனைப் பற்றி சிறந்தவாறு முடிவெடுக்கக் கூடியவர்களாக இருக்கின்றனர்.

மறுபக்கமாக பார்க்கும்போது மிக வறிய நிலையில் உள்ள ஒரு பெண் நம்பகரமான கைவசமுள்ள காசுப் பாய்ச்சல் ஏதுமில்லாத நிலையில் கடன் எடுக்க விரும்புகின்றனர் என்று வைத்துக் கொள்வோம். குழு நிலையிலான முறையில் கடன் வழங்கும் முறையை உபயோகிக்கின்ற நுண்நிதி நிறுவன மொன்றில் அதிலிருக்கின்ற ஏனைய பெண்கள் அப்பெண்ணின் கடனை மீண்டும் செலுத்துவதற்கு உத்தரவாதம் அளிப்பதன் மூலம் தமது சொந்த ஆபத்தை அதிகரிக்க விரும்பாமல் போகலாம்.

---

1 "மிலேனியம் அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு நுண்நிதி ஒரு பயனுறுதிமிக்க மூலோபாயமா?" - Littlefield, Elizabeth, Jonathan Murdoch and Syed Hashimi. அவதானிப்புக் குறிப்பு இல. 24, வாஷிங்டன் D.C. CGAP 2003

2 இந்த அவதானிப்புக் குறிப்பில் மிகவும் வறியவர்கள் எனப்படுவோர், ஒரு நாளைக்கு ஒரு அமெரிக்க டொலரை விடவும் குறைவான வருமானத்தில் உயிர் வாழ்பவர்கள் என வரைவிலக்கணப்படுத்தப்படுகிறது. ஆகவும் வறியவர்கள் எனப்படுவோர் இக் குழுவில் அடிமட்டத்தில் உள்ள உப பிரிவினராவர் - நம்பகரமான விதத்தில் ஒரு விதமான வருமானமும் இல்லாத அனாதரவானவர்கள்.

3 பங்களாதேஷில் அரச சார்பற்ற நிறுவனங்களின் (NGO) பொருளாதாரமும் ஆளுகையும்" Zaman, Hassan. Ed. ஆலோசனை உருவரைக்குறிப்பு, வாஷிங்டன் D.C. 2005

இந்த அவதானக் குறிப்பின் ஆக்கியோன்கள் CGAP இன் சிரேஷ்ட நுண்நிதி நிபுணர் ஸையித் ஹஷீமியும் CGAP இன் சிரேஷ்ட ஆலோசகர் ரிச்சர்ட் ரோசன்பேர்க்கும் ஆவர் இந்த ஆய்வறிக்கையின் மூலக்கருத்தை வழங்கியமைக்காக ஆக்கியோன்கள் எலிசபெத் லிட்டில்பீல்டுக்கு கடமைப்பட்டிருக்கிருக்கிறார் கள். இந்த ஆய்வறிக்கைக்குப் பங்களித்தமை குறித்து அவர்கள் அலெக்ஸியா லதோர்டியூ, ஜெனட் தோமஸ் மற்றும் சமீர் பதாவி ஆகியோருக்கு நன்றியுடையவர்களாக இருக்கிறார்கள்.அத்துடன் ஆக்கியோர்கள், பிரிஜிட் ஹெல்ம்ஸ் மற்றும் ஊஸா ஸனனிகோன் ஆகியோருக்கு பல ஒத்தாசையான கருத்துக்களை வழங்கியமைக்காகவும் நன்றியுடையவர்களாக இருக்கிறார்கள்

© 2006, வறியவர்களுக்கு ஆதரவளிப்பதற்கான ஆலோசனைக் குழு.

வறியவர்களுக்கு ஆதரவளிப்பதற்கான ஆலோசனைக் குழு (CGAP) ஆனது நுண்நிதிக்கு ஆதரவளிக்கும் 33 அபிவிருத்தி முகவர் நிலையங்களின் ஒன்றியமாகும். மேலதிகத் தகவல்களை www.cgap.org என்ற இணைய தளத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்

இதற்கு மேலதிகமாக குழு உறுப்பினர்களால் சுயமாக விலகியிருத்தல் மற்றும் குழு உறுப்பினர்களால் விலக்கி வைக்கப்பட்டிருத்தல் என்பவற்றுக்கு மேலதிகமாக சில ஒதுக்கி வைத்தல்கள், நுண்நிதி நிறுவன கொள்கையினாலேயே ஏற்படுத்தப்படுகின்றன. ஏனெனில் அநேகமான நுண்கடனானது பிணைமுறி இல்லாதிருப்பதனால் திருப்பிச் செலுத்தப்படாத கடன்கள் சீக்கிரமே கட்டுப்படுத்த முடியாத நிலைக்கு மாறிவிடு கின்றன. அவை மிகக் குறைவான மட்டங்களில் வைக்கப்படாது இருந்தால் சரியாகக் கூறுவதாயின் புதிதாக ஆரம்பிக்கப்படும் நுண்வியாபாரங்கள் மிக ஆபத்தானவை. ஒருசில விதிவிலக்குகளைத் தவிர நுண்நிதி நிறுவனங்கள் கண்டறிந்த விடயம் யாதெனில் புதிதாக நுண் சிறுதொழில் முயற்சிகளுக்குள் நுழைந்துள்ளதுடன் புதிய தொழில்முயற்சி வெற்றிகரமாக அமையாதநிலையில் கடனைத் திருப்பிக் கொடுக்கக்கூடிய வேறேதும் வருமான வழிகளை கொண்டிராதவர்களுக்கு கடனை வழங்கும்போது கடன் கட்டத்தவறுதலை கட்டுப்படுத்தக்கூடிய வரம்புக்குள் வைத்துக்கொள்வது என்பது முடியாது என்பதாகும். நுண்நிதி நிறுவனமானது செயல்ரீதியாக நிலைத்திருந்து எதிர்காலத்தில் அதிகரித்துக் கொண்டு போகும் ஏழைப்பாவனையாளர்களுக்கு சேவை செய்ய விரும்பினால் இக்கொள்கைக்கு உட்பட்டவாறு நடந்து கொள்ளுதல் எனப்படுவது மிகவும் வறிய மக்கள் சிலர் நுண்நிதிச் சேவைகளிலிருந்து விலக்கப்படுகின்றனர் என்பதாகும்.

இன்னுமொரு காரணி மிகவும் வறிய நிலையிலுள்ள மக்கள் முற்றுமுழுதாக நிதிசாராத உதவிகளான உணவு, மானியம் அல்லது உத்தரவாதமிக்க வேலைவாய்ப்பு என்பனவற்றை விரும்புகின்றனர். கடன்கள் அல்லது வைப்புச் சேவைகளில் பயன்பாட்டை செய்துகொள்ளுமுன்னர் அவர்களுக்கு இவை தேவைப்படுகின்றன. கடந்த காலங்களில் பெரும்பாலான நுண்நிதி நிறுவனங்கள் முடிவு செய்திருப்பது யாதெனில், தமது நிதிசார் வியாபாரத்தின் மீது கவனத்தை மேலும் வினைத்திறனுடனும் நிலைபேறான ரீதியிலும் பிரத்தியேகமாக அவர்கள் கவனஞ் செலுத்தினால் அதனை வழங்க முடியும் அல்லது போஷாக்கு, சுகாதாரம் மற்றும் பயிற்சி போன்ற முறைசாராத சேவைகளை தவிர்த்துக்கொள்ள முடியுமாயின் அல்லது தனியான திணைக்களம் தனிப்பட்ட செயற்பணியினரைக் கொண்டு தமது நுண்கடன் வழங்கும் சேவைகளை விட்டும் இச்சேவைகளை விலக்கி இருப்பின், வழங்க முடியுமென முடிவு செய்துள்ளனர். வினைத்திறன் மற்றும் அவதானம் தொடர்பான பிரச்சினைகளுக்கு மேலதிகமாக அதே அலகானது ஒரு பக்கமாக சமூக ஒத்துழைப்புக்கு ஆதரவளிக்கும் அதேவேளை மறு பக்கமாக அது வழங்கும் கடன்களை மீளச் செலுத்துவதை வலியுறுத்துமாயின் வாடிக்கையாளர்கள் குழப்பத்துக்கு ஆளாகுவர்.[4]

மக்களுக்கு உதவுவதற்கு நுண்நிதி மட்டுமே ஒரேயொரு வழி மட்டுமல்ல. மிகவும் வறிய மக்களின் தேவைகளுக்கும் சூழ்நிலைகளுக்கும் வழமையாக சிறந்த முறையில் பொருத்தமாக இருக்கின்ற “பாதுகாப்பு வலை நிகழ்ச்சித் திட்டங்கள்” போன்ற ஏனைய சேவைகளும் நிறுவனங்களும் உள்ளன. பொருத்தமான நிதிசார் சேவைகளை அணுகக் கூடியவாறாக மிகவும் வறிய மக்களுக்கு உதவும் ஒரு அணுகுமுறை பாதுகாப்புவலை நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பித்து அவை அதனைத் தொடர்ந்து நிதிசார் சேவைகளுக்கு மிகவும் வறிய மக்கள் அணுகக்கூடியவாறு உதவும். இந்த அவதானக் குறிப்பு சில பிரச்சினைகளை ஆய்வு செய்கின்றது. (ஒரு சமயம் தோற்றம் பெற்று இருக்குமோ?) இதிலே மானியமாக நிதி வழங்கப்படும் பாதுகாப்பு வலை நிகழ்ச்சித் திட்டங்களில் மிகவும் வறிய மக்கள் பங்குபற்றுகின்றனர். இங்கு இவர்கள் முறைசாராத நிதிசார் ஒத்துழைப்பைப் பெறுகின்றனர். அதாவது வேலைவாய்ப்பு, உணவு உதவி, பயிற்சிகள் போன்றன. இதனைப் போலவே பொருத்தமான நிதிசார் சேவைகளுக்கான அணுகுமுறைக்காக அவற்றை நல்ல முறையில் பயன்படுத்தக்கூடிய மட்டத்துக்கு தற்போதைய மட்டத்திலிருந்து நுண்நிதிதுறைக்கு முன்னேற்றுதல் இவ்வாறான உதாரணங்கள், வினாக்களை எழுப்புகின்றன. நுண்நிதியினால் மிகவும் வறிய மக்களுக்கு உதவ முடியுமா? அப்படியாயின் எவ்வாறு? மானியங்களை பெறும் நிலையிலிருந்து முன்னேறி மக்கள் முழு அளவிலான நிதிசார் வாடிக்கையாளராக மாறமுடியுமா?

## பாதுகாப்பு வலை நிகழ்ச்சித் திட்டங்களுடன் நுண்நிதியானது இணைக்கப்பட முடியுமா?

சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் பலதரப்பட்ட தலையீட்டு வீச்சுகளினூடே வறியவர்களின் பொருளாதார மற்றும் சமூகப் பாதுகாப்பை முன்னெடுப்புச் செய்கின்றன.(உணவு உதவி அல்லது உத்தரவாதம் வழங்கப்பட்ட தொழில் வாய்ப்புக்கள்) இது மிகவும் நம்பிக்கையற்ற நிலையிலுள்ளவர்களுக்கான தேவைகளையும் அநாதரவான தரத்துக்கு[5] நழுவிச் செல்லக் கூடிய ஆபத்தானவர்களுக்கும் சமூகக் காப்புறுதியை வழங்கி அத்தகைய நிலைமையின் ஆபத்தைக் குறைத்தல் போன்ற தலையீடுகளின் மூலம் சமூக, பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுப்புச் செய்யலாம். சமூகப் பாதுகாப்பு தந்திரோபாயத்தின் ஒரு பகுதியாக பாதுகாப்பு வலைகள் பொருளாதார ஏணியின் அடிமட்டத்திலுள்ள மக்களை அண்மித்து உதவுவதில் வெற்றிகண்டிருக்கின்றன. இந்த மக்கள் பாரம்பரியமான நுண்நிதியை பொறுத்தளவில் இது பெறுவதற்குக்கூட மிக வறியவர்களாகவுள்ளனர்.

நுண்நிதியைப் போலல்லாமல் பாதுகாப்புவலை நிகழ்ச்சித் திட்டங்கள் ஆகக்கூடுதலாக உதவித்தொகை வழங்கப்படவேண்டியுள்ளன. நிறுவனங்களினால் சேவையைப் பெறுகின்ற பெரும்பாலான மக்களுக்கு சேவைபுரிகின்ற அநேகமான நிறுவனங்கள் தம்மால் வழங்கப்படும் சேவைகளுக்கான செலவுகளை தாங்கிக் கொள்ள முடியாமலுள்ளன. மேலதிகமாக கடன் வசதிகளையும் ஏனைய நிதிசார் சேவைகளையும் வழங்குவதற்குத் தேவைப்படும் திறன்களை விட பாதுகாப்பு வலைச் சேவைகளுக்காக அவசியமான திறன்கள் சற்று வித்தியாசமானவை. இவற்றுக்காகவும் வேறு பல காரணங்களுக்காகவும் நுண்நிதி நிறுவனங்கள் நிதிசார் சேவைகளுடன் பாதுகாப்பு வலைச் செயற்பாடுகளை வழங்கியவாறு நுண்நிதி நிறுவனங்கள் தாம் எட்டும் தன்மையை அதிகரிக்க முயலக்கூடாது.

இப் பொதுவிதியை கைவிடாது சில நுண்நிதி நிறுவனங்கள் தற்போதுள்ள பாதுகாப்பு நிதி நிகழ்ச்சித் திட்டங்களுடன் ஒன்றிணைந்து ஆகவும் வறிய மக்களுக்குப் பயன்படும் வகையில் குறைந்த பட்சமாவது தம்மை ஆக்கிக்கொள்ளும் விதமாக எதிர்பார்க்கின்றனர். சில பாதுகாப்பு வலை மற்றும் மானிய நிகழ்ச்சித் திட்டங்கள் தமது வாடிக்கையாளர்களுக்கு நிதிசார் பயிற்சிகளையும் தகவல்களையும் வேண்டுமென்றே வழங்குவதன் மூலம் அவர்களது வாடிக்கையாளர்கள் அதனைத் தொடர்ந்து நுண்நிதி நிறுவனங்களுடன் இணைந்து கொள்கின்றனர். இந்த ஒன்றிணைப்பானது அநேகமான அநாதரவாகியுள்ளவர்கள் சேமித்து சொத்துக்களைக் கட்டியெழுப்ப ஆரம்பித்து நிலைபேறான பொருளாதார செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான வளங்களையும்,

[4] சிறியளவான நுண்நிதி நிறுவனங்கள் - உதா: “பட்டினியிலிருந்து விடுதலை” நிகழ்ச்சித்திட்டத்தின் மாதிரியை பயன்படுத்துவோர் - தமது நுண்நிதிச் செயற்பாடுகளில் நுண்நிதியல்லாத சேவைகளை தொடர்ந்தும் ஒன்றிணைக்கின்றன.

[5] சமூகப்பாதுகாப்பை உலக வங்கி வரைவிலக்கணம் செய்யும்போது அதனை “*(i)* ஆபத்தை சிறந்தமுறையில் முகாமை செய்வதற்காக தனிப்பட்டோருக்கும், குடியிருப்புகளுக்கும் மற்றும் சமூகங்களுக்கும் உதவுவதற்காகவும் “*(ii)* படுமோசமாக வறுமையிலிருப்போருக்கும் உதவுவதற்கான பொதுத்துறையின் தலையீடு” எனக் குறிப்பிடுகிறது. Holzmann,Robert and Steen Jorgensen. “சமூகப்பாதுகாப்பு முகாமைத்துவம்: சமூகப் பாதுகாப்புக்கும் அதற்கும் அப்பாலான வற்றுக்குமான சட்டக அமைப்பு”. சமூகப் பாதுகாப்புக் கலந்துரையாடல் ஆய்வறிக்கை #6. வாஷிங்டன் D.C உலகவங்கி பெப். 2000

நம்பிக்கையையும் பெறுவர் என்ற அடிப்படையில் அமைந்ததாகும். இந்நிலையில் அவர்கள் நுண்நிதி நிறுவனங்களால் வழங்கப்படும் கடன்களையும் ஏனைய நிதிசார் சேவைகளையும் நல்லமுறையில் பயன்படுத்துவர். இன்னொரு வார்த்தையில் சொல்வதானால் பாதுகாப்பு வலை நிகழ்ச்சித் திட்டங்களிலிருந்து பயன்பெறுவோர் அதிலிருந்து "முன்னேறி" முற்றுமுழுதான நுண்நிதி வாடிக்கையாளர்களாக மாறுவர்.

இந்த அவதானக் குறிப்பானது நுண்நிதி நிறுவனங்ளுக்கும் பாதுகாப்பு வலை நிகழ்ச்சித் திட்டங்களுக்குமான இரு மாதிரி இணைப்புக்களைப் பற்றி கலந்துரையாடுகின்றது. முதலாவது மாதிரியில் பாதுகாப்பு தமது வாழ்வாதாரங்களை சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்ய உதவுவதற்காக அடிப்படை நிதிசார் சேவைகளை விருத்திசெய்கின்றன. பாதுகாப்பு வலை நிகழ்ச்சித் திட்டத்துடனான நுண்நிதி நிறுவனங்களின் ஈடுபாடு மட்டுப்படுத்தப்பட்டது. வெற்றிகரமாக "முன்னேறியோரை" வாடிக்கையாளர்களாக சேர்த்துக்கொள்வதற்காக நுண்நிதி நிறுவனமானது பாதுகாப்பு வலை நிகழ்ச்சித் திட்டத்துடன் இணைந்து செயல்படுகின்றது. நுண்நிதி நிறுவனத்துக்குரிய அனுகூலமானது பங்குபற்றுவோரின் நடத்தை பற்றிய தகவல்களை பாதுகாப்பு வலை நிகழ்ச்சித் திட்டம் உருவாக்குவதாகும். இது இத்தகைய பங்குபற்றுபவர்கள் கடன்களை திருப்பிச் செலுத்தும் சாத்தியங்கள் குறித்து நுண்நிதி நிறுவனத்துக்கு சிறந்த தீர்மானங்களை மேற்கொள்ள உதவும். ஒரு நுண்நிதி நிறுவனமானது பாதுகாப்பு வலையில் பங்குபற்றினோரை கருத்திற்கொள்ளும்போது அவர்களின் வேலைக்கு முன்வருவதற்கான கடந்த கால பதிவுகள், ஒழுங்காக சேமித்தல், பாதுகாப்பு வலை நிகழ்ச்சித் திட்டத்தினால் முன்வைக்கப்பட்ட கடனை திருப்பிச் செலுத்தல் போன்றவற்றினால் அவர் ஆபத்துக்கூடிய கடன் பெறுபவராக நுண்நிதி நிறுவனத்துக்கு வழமையான நுண்கடனை பெற்றுக்கொள்ள அணுகும்போது கணிக்கப்படுகின்றார். இத்தகைய தகவல்கள் இல்லாமல் நுண்நிதி நிறுவனமொன்று வறிய வாடிக்கையாளர்களை அணுகுவதை விட அவ்வாறான தகவல்களை நுண்நிதி நிறுவனம் அணுகுவதற்கு வாய்ப்பளிப்பது வறிய வாடிக்கையாளர்களுக்கு பாதுகாப்பான கடன்களைப் பெற்றுக் கொடுக்க இயலுமாக இருக்கும்.

இந்த உறவு முறையானது பாதுகாப்பு வலையில் பங்குபற்றுவோருக்கு நன்மையளிக்கின்றது. ஏனெனில் அவர்கள் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டத்துடனேயே இருக்கையில் முன்னேறிச் செல்வதற்கும் சிறந்த செயலாற்றலுக்கு ஊக்கமளிப்பதற்குமான நீண்டகால வழிவகையை அமைத்துக் கொடுக்கின்றது. இவ்வாறான வெற்றி–வெற்றி நிலைமை சிறியளவான மேலதிகச் செலவை உருவாக்குகின்றது அல்லது நிகழ்ச்சித் திட்டத்துக்கோ அல்லது நுண்நிதி நிறுவனத்துக்கோ சிறியளவான ஆபத்தையே ஏற்படுத்துகின்றது. பலவீனமான நுண்நிதி நிறுவனம்கூட இந்த உத்தியை பயன்படுத்தி நிலைபேறான தன்மையை அடைவதற்கான அதன் திறமைக்கு குந்தகம் விளைவிக்காது வாய்க்கக்கூடிய வாடிக்கையாளர்களை சேர்த்துக் கொள்வதற்கான அதன் சமூகப் பயணத்தைத் தொடரலாம்.

இரண்டாவது மாதிரியானது ஒரு நுண்நிதி நிறுவனமொன்றுக்கும் ஒரு பாதுகாப்பு வலை நிகழ்ச்சித் திட்டத்துக்கும் இடையிலான மேலும் தீவிரமான ஒத்துழைப்புடன் சம்பந்தப்பட்டுள்ளது. இந்த மாதிரியில் பாதுகாப்பு வலை பங்குபற்றுநர்களுடன் நேரிடையாக பணிபுரிகின்ற ஒரு தனிப்பட்ட துணையமைப்பை அல்லது பங்களிப்பை உருவாக்குகின்றது. பாதுகாப்பு வலை நிகழ்ச்சித் திட்டத்துடனான கூட்டுறவில் நுண்நிதி துணையமைப்பானது நுண்நிதிச் சேவைகளையும் சில சமயம் உதவியளிக்கப்பட்ட சேமிப்புக்களை அல்லது கடனைக் கூட வழங்குகின்றது. வெற்றிகரமாக முன்னேறியோர் நுண்நிதி நிறுவனத்தின் வழமையான நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அணுகுதல்களைப் பெற்றுக்கொள்கின்றனர். நுண்நிதி நிறுவன துணையமைப்பு தனது சேவைகளை பங்குபற்றுனருக்கு வழங்குவதற்காக இயலுமான வகையில் நுண்நிதிக்கான அணுகுதல்கள் அவசியமாகும். பிரதான நுண்நிதி நிகழ்ச்சித் திட்டத்துடன் இணைந்து கொள்வதற்காக பங்குபற்றுநர்களுக்கு இயலுமான வரையில் இது இடம்பெறும்.

இந்த இரண்டாவது மாதிரியில் கூடிய செலவினங்களும் ஆபத்துக்களும் நுண்நிதி நிறுவனங்களுக்கு உண்டு. இதில் நுண்நிதி நிறுவனமொன்றின் நுண்கடன் செயற்பாட்டில் முக்கியமான ஒரு பகுதியாகவுள்ள கண்டிப்பான மீளச்செலுத்தும் ஒழுங்கைக் கொண்ட கலாசாரத்துக்கு வேட்டு வைக்கின்ற பாது காப்பு வலை நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக மானியங்களைக் கையளிக்கும் ஆபத்தும் உள்ளடங்கியுள்ளது. பாதுகாப்பு வலைக்கும் நுண்நிதி நிறுவனங்களுக்கும் இடையில் மிகத் தெளிவான ஒரு வித்தியாசம் இருக்கவேண்டியுள்ளது. வித்தியாசமான செயற்பணியினர் வேறுபாடான துணையமைப்பில் செயற்படுவதன் மூலம் இதனை உண்மையாகவே சாதிக்கலாம். இவ்வாறாக நேரடியாக ஈடுபடுத்தும் மாதிரி முதிர்வடைந்த வித்தியாசமாக வலுமிக்க நுண்நிதி நிறுவனங்களுக்கு மட்டுமே சரிவரும். இவற்றின் அடிப்படையான வியாபாரம் உறுதியாகவும் நிலைபேறுடனும் செயற்படுவதாகும். இதன்மூலம் தன் முகா மைத்துவத்தையும் செயற்பணி வழங்கலையும் கலந்து செயற்படுத்துவதற்கு வாய்ப்புண்டு.

### நுண்நிதி நிறுவனங்களுக்கு வாடிக்கையாளரை தந்து பயிற்சியை வழங்கும் பாதுகாப்பு வலை நிகழ்ச்சித் திட்டங்கள்.

#### Care/பங்களாதேஷ்: கிராமிய பராமரிப்பு நிகழ்ச்சித்திட்டம்

பொதுவேலை நிகழ்ச்சித் திட்டமாக 1982 இல் பங்களாதேஷில் Care இன் கிராமிய பராமரிப்பு நிகழ்ச்சித்திட்டம் (RMP) ஆரம்பிக்கப்பட்டது. இது அநாதரவான கிராமியப் பெண்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கியது. இப்பெண்கள் குடியிருப்புக்களின் தலைவிகளாக அல்லது அங்கவீனர்களான ஆண்களை திருமணம் செய்தவர்களாகவும் வேறேதும் நிரந்தரமான வருமானம் இல்லாதவர்களுமாக இருப்பர். நிரந்தரமான நான்காண்டு காலத்துக்காக RMP இல் பெண்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். கிராமிய மண்பாதைகளை பராமரிப்பதற்காக அவர்கள் சம்பளமாக பணத்தைப் பெறுகின்றனர். இந்நிகழ்ச்சித் திட்டத்துக்காக தெரிவுசெய்யப'படும் பெண்கள் 18 - 35 வயதுக் குட்பட்டவர்களாகவும் இருப்பர். இந்த வேலையை செய்வதற்கான சரீர பலத்தைக் கொண்டவராகவும் இருக்க வேண்டும். இந்நிகழ்ச்சித் திட்டத்திலுள்ள ஒவ் வொரு பெண்ணும் தனது ஊதியத்தின் 1/5 பங்கை[6] ஒதுக்கக்கூடிய கட்டாய சேமிப்புத்திட்டத்தில் பங்குபற்ற வேண்டுமென வேண்டப்படுகின்றனர். பங்குபற்றுவோர் எண்ணறிவு, மனித உரிமைகள், பால்நிலை சமத்துவம், சுகாதாரமும் போஷாக்கும் என்பவைகளைப் போலவே வருமானத்தை உருவாக்கும் திறன் கள் மற்றும் நுண் சிறுதொழில் முயற்சி, முகாமைத்துவம் போன்றவற்றில் பயிற்றப்படுகின்றனர். நிகழ்ச்சித் திட்ட அறிவு முடிவுற்று ஓராண்டுக் காலத்துக்கு வியாபார முகாமைத்துவ அறிவுரையை Care தொடர்ந்து வழங்கும்.

பங்களாதேஷின் 90% ஆன கிராமப்புற மாவட்டங்களில் RMP செயற்படுகின்றது. நிகழ்ச்சித்திட்ட செயற்பணிக் குழுவினர் 84,000 கி.மீ. பாதைகளை பராமரிக்கின்றனர். இந்நிகழ்ச்சித் திட்டத்தின் எந்த சந்தர்ப்பத்திலும் 40,000 இற்கும் மேற்பட்ட பெண்கள் பங்குபற்றுகின்றனர். இவர்களுள் ஒவ்வொரு ஆண்டும் 10,000 பேர் நிகழ்ச்சித் திட்டத்தை நிறைவு செய்கின்றனர்.[7]

தொடர்ச்சியான வெளியக உதவி நாடப்படுவதற்கும் அப்பால் RMP ஆனது தம் பங்குபற்றுநர்களை நகர்த் துவதை இலக்காகக் கொண்டுள்ளது. கட்டாயமான சேமிப்பிலிருந்து பெறப்பட்ட பயிற்சிகளையும் கொண்ட புதிய நுண் சிறுதொழில் முயற்சியாளர்களை உருவாக்குவது இந்த தந்திரோபாயமாகும். எல்லாப் பெண்களுமே

நுண்தொழில்முயற்சியாளர்களாக வெற்றியடையாவிட்டாலும்கூட RMPக்கு ஒரு மனதில் ஆழப்பதிந்துள்ள வரலாற்றுப் பாதையொன்றுள்ளது. தமது நிகழ்ச்சித் திட்ட சுற்றின் இறுதியில் 79% ஆன பெண்கள் நுண்சிறுதொழில் முயற்சி செயற்பாடுகளில் சுயமாக தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இச்செயற்றிட்டத்தில் ஈடுபட்டுள்ள பெண்கள் உள்ளூர் நுண்நிதி நிறுவனங்கள் பற்றிய தகவல்களைப் பெற்று தாம் இதில் முன்னேறிய பின்னர் தொழிற்படுவதற்கான மூலதனத்துக்காகவும் விரிவாக்கல் தேவைகளுக்காகவும் நுண்நிதி நிறுவனங்களை அணுகுவதற்காக உற்சாகப்படுத்தப்படுகின்றனர். 2005ம் ஆண்டு ஆரம்ப காலத்தில் நடத்தப்பட்ட Care பங்களாதேஷ் “குடும்ப பாதுகாப்பு ஆய்வில்” தாம் முன்னேறிய பின்னரும் மூன்று ஆண்டுகளுக்குப் பின்னரும் அரச சார்பற்ற நிறுவன உறுப்பினர்களாக 63% ஆன RMP முன்னேற்றதாரிகள் தொடர்ந்தும் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.[8]

## DFID–Care/மாலாவி: CRIMP அந்தளவு வெற்றிகரமாக அமையாத பிரதிபண்ணும் முயற்சி.

RMP இன் வெற்றியான வேலைவாய்ப்பு நிகழ்ச்சித் திட்டமொன்றிலிருந்து பங்குபற்றி முன்னேற்றதாரியாகி நுண் நிதிக்குள் நுழைவது இலகுவானதென கருத்திற் கொள்ளப்படக்கூடாது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதி முயற்சி ஒன்று இடம்பெற்ற மாலாவியில் நீண்டகால நிலைபேறான தீர்வுகளை அதன் பங்குபற்றுநர்களுக்கு வழங்குவதற்கு தவறியுள்ளது.

மத்தியப் பிராந்திய உட்கட்டமைப்பு பராமரிப்பு நிகழ்ச்சித் திட்டம் (CRIMP) இது மாலாவியில் 1999ம் ஆண்டின் பிற்காலப் பகுதியில் மத்திய பிராந்தியத்தின் இரு மாவட்டங்களில் ஆரம்பிக்கப்பட்ட DFID – CARE நிகழ்ச்சித் திட்டமாகும். கிராமிய வீதிப் பராமரிப்பில் உரிய பெண்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் ஈராண்டு முன்னோடிச் செயற்றிட்டமாக CRIMP வடிவமைக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் 1,500 பெண்கள் வேலைவாய்ப்புப் பெற்றனர். குழு ஒற்றுமை, நம்பிக்கைக் கட்டியெழுப்பல், அடிப்படை வியாபாரத் திறன்கள் போனறவற்றில் பங்குபற்றுநர் பயிற்றப்பட்டனர். பொருத்தமான பொருளாதார செயற்பாடுகளைத் தெரிவு செய்வதிலும் அவர்கள் உதவியைப் பெற்றனர். அவர் களது ஊதியங்களில் மூன்றிலொரு பங்கு கட்டாயமான சேமிப்பாகக் கழிக்கப்பட்டது. இதனை வேலைவாய்ப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் இறுதியில் அவர்கள் பெற்றுக்கொண்டனர். பங்குபற்றுநர்கள் தன்னார்வ குழு நிதியொன்றுக்காகவும் சேமித்து குழுவின் ஏனைய பெண்களுக்கு கடன்களை விநியோகிக்கவும் அது பயன்பட்டது. இச்செயற்றிட்டம் 2002ன் ஆரம்பத்தில் நிறைவு பெற்றது. இச் செயற்றிட்டத்தின் சில பகுதிகள் அதனைத் தொடர்ந்து தேசிய பாதுகாப்பு வலை நிகழ்ச்சித் திட்டத்தில் ஒன்றிணைக்கப்பட்டது.[9]

CRIMP வெற்றிகரமாக, மிகவும் வறிய பெண்களை இலக்காக்கிக் கொண்டது. இதில் பயனுறுதியுடைய சேமிப்பு நிகழ்ச்சித்திட்டமொன்றைக் கட்டியெழுப்பியது. அத்துடன் பயன்மிக்க திறன் பயிற்சியையும் வழங்கியது. வீதிப் பராமரிப்பு வேலையிலிருந்து பெறப்பட்ட ஊதியங்களையும் பெறப்பட்ட பயிற்சியையும் சேர்த்து பெரும்பாலான பங்குபற்றுநர்கள் வருமானத்தை உருவாக்கும் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு உதவியது. (பெரும்பாலும் சில்லறை வியாபாரமும் பண்ணைத் தொழிலும்) அவசரகால நுகர்வுத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக சேமிப்புகள் பெருமளவில் உதவியாக இருந்தன. பெரும்பாலான குடும்பங்கள் நீண்டகால பட்டினியினால் கஷ்டப்பட்டபோது உதவியது.[10]

நிகழ்ச்சித்திட்டம் முடிவுற்று மூன்றாண்டு காலத்தின் பின்னரும் CRIMP பங்குபற்றுநர்களில் அரைப்பகுதிக்கும் அதிகமானோர் சேமிக்கும் தமது சேமிப்புக்களை பயன்படுத்தியதுடன் சிறிய வியாபாரங்களை தொழிற்படுத்தவும் உதவியதாக கூறினர்.[11] ஆயினும் கடன் கட்டுப்பாடுகள் தொடர்ந்தும் இருந்ததுடன் நீண்டகால பொருளாதார மீட்சியும் ஏற்படுவதாக இல்லை.

CRIMP ஆனது பங்குபற்றுநர்கள் பெற்ற பயிற்சியும் சேமிப்பும் அவர்களை நுண்தொழில் முயற்சியாளர்களாக ஆக்கி நுண்நிதி நிறுவனங்களிலிருந்து வேலை செய்வதற்கான மூலதனம், வியாபார விஸ்தரிப்பு மற்றும் ஏனைய நிதிசார் சேவைகளிலிருந்து அவர்கள் கடன் பெறுவர் என்ற ஊகத்தின் பேரில் ஆரம்பிக்கப்பட்டதாகும். ஆனால் CRIMP ஆனது நுண்நிதி நிறுவனங்களை பங்காளர்களாக ஆக்குவதில் தவறிவிட்டது. நுண்நிதி நிறுவன தொழிற்பாடுகளை கவர்வதற்குக்கூட இயலாத அளவுக்கு மாவட்டங்கள் வறுமையைக் கொண்டிருந்தன. ஆகவே சேமிப்புக்களுக்கான பொறிமுறையை உருவாக்கி நிதிசார் ஒழுங்கு முறையை ஊக்கப்படுத்தி வருமானத்தை ஊட்டும் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு உதவிய போதிலும் இந்நிகழ்ச்சித்திட்டம் நுண்நிதி நிறுவன சேவைகளுக்கு இடமாறும் ஆதரவை வழங்க அது தவறிவிட்டது.

## பாதுகாப்புவலை நிகழ்ச்சித்திட்டத்தில் நுண்நிதி நிறுவனங்களின் நேரடியான ஈடுபாடு.

### BRAC / பங்களாதேஷ் : IGVGD நிகழ்ச்சித்திட்டம்

பங்களாதேசில் இக்கட்டுக்குள்ளாகும் குழுக்களின் அபிவிருத்தி வருமானத்தை உருவாக்கும் நிகழ்ச்சித் திட்டம்(IGVGD), அரசாங்கம், உலக உணவு நிகழ்ச்சித் திட்டம்(WFP) மற்றும் BRAC ஒரு முன்னணி நுண்நிதி நிறுவனம் என்பனவற்றுக்கிடையே உருவாக்கப்பட்ட ஒத்துழைப்பு நிகழ்ச்சியாகும். இந்நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபற்றியோர் சிறிதளவோ அல்லது வருமானம் உழைக்கும் வாய்ப்புக்கள் எதுவுமே இல்லாத அநாதரவான கிராமத்து பெண்களாகும். BRACஆனது மிக ஆரம்பத்திலேயே தம் வழக்கமான நுண்நிதி தொழிற்பாடுகளில் மிகவும் வறுமை நிலையிலுள்ளவர்களை சேர்த்துக் கொள்வது கடினம் என்பதை கண்டறிந்தது. ஏனெனில் அவர்களைப் பொறுத்தளவில் கடனைவிட அடிப்படையாக உயிர்வாழ்வதற்கு உடனடி மானிய உதவி அவர்களுக்குத் தேவைப்பட்டது. அநாதரவானோர் மத்தியில் உணவுக்கான மட்டுப்படுத்தப்பட்ட அல்லது நிச்சயிக்கமுடியாத அணுகுதல்களைக் கொண்ட நீண்டகாலப் பிரச்சினைகளுக்கு அரச உதவி சிறிதளவே உதவிசெய்கின்றது என்பதை BRAC அறிந்திருந்தது. அத்துடன் நீண்டகாலத்துக்கு சகல அநாதரவான நிதியும் இல்லாமலிருந்தது. IGVGDஇன் இலக்கு பங்குபற்றுநர்கள் ஆகக் கூடிய உதவி வழங்கப்பட்ட உயிர்வாழ்வு நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து நிலைபேறான நுண்நிதி நிகழ்ச்சித் திட்டத்துக்கு நகர்த்த உதவும் பாலமொன்றைக் கட்டுவதேயாகும்.

IGVGD ஆனது அரசாங்க பாதுகாப்பு வலை நிகழ்ச்சித்திட்டத்தின் மீது கட்டியெழுப்பப்பட்டதாகும். இது அநாதரவானோருக்கும் பட்டினி ஆபத்து அதிகமாகவுள்ள பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கும் 18 மாதங்களுக்கு இலவசமாக தானியத்தை

[6] தற்போதைய நாளாந்த சம்பளம் அ.டொ. 0.85 எனவே இதில் 17 கட்டாய சேமிப்பாக பிடித்து வைத்துக்கொள்ளப்படுகிறது.

[7] நாலாண்டின் முடிவில் வெளியேறும் 10,000 பேருக்குப் பதிலாக வேறு 10,000 பேர் அமர்த்தப்படுகின்றனர். Ahmed, Shaik S. *Delivery Mechanism of Cash Transfer Programs to the poor in Bangladesh,* Washington DC, World Bank May 2005

[8] டாக்டர் பிலிப் ரான்னரிடமிருந்து மின்னஞ்சல், நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர், RMP;

[9] Porter Harris et al: மத்தியப் பிராந்திய உட்கட்டமைப்பு பராமரிப்பு நிகழ்ச்சித் திட்டம் - நோக்க மீளாய்வுக்கான இறுதி பெறுபேறு” Lilongwe,Malawi CARE, Malawi 2002 www.caremalawi.org

[10] Pinder, Caroline –“ பொருளாதாரம்: மாளாவியின் கிராமக் குடியிருப்புக்களுக்கான பாதை” Lilongwe,Malawi CARE, Malawi 2002 www.caremalawi.org

[11] Scharrf, Xanthe - மத்தியப் பிராந்திய உட்கட்டமைப்பு பராமரிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் (CRIMP) முன்னைய மதிப்பீடு. டிசம்பர் 2005 Mimeco

வழங்கியது. வழமையான நுண்நிதி செயற்பாடுகளிலிருந்து முழுமையாக வேறாக்கப்பட்ட ஒரு BRAC அலகு பெண்களை குழுக்களாக ஒழுங்கு செய்து சேமிப்புக்களைத் திரட்டி மரக்கறி தோட்டம் அல்லது கோழிப்பண்ணை வளர்த்தல் மற்றும் ஏனைய கால்நடை வளர்ப்பு போன்றவற்றில் திறன் பயிற்சிகளை வழங்கியது. திறன் பயிற்சியின் பின்னர் பங்குபற்றுனர்கள் மிகச் சிறியளவான கடன்களை (50 டொலர்) சிறியளவிலான வருமான உற்பத்தி செயற்பாடுகளின் போது பயன்படுத்துவதற்காக பெறுகின்றனர். கடன்களின் மீதான இக்கொடுப்பனவுகள் மிகவும் சிறியதாக இருப்பதுடன் இப்பணம் பெண்கள் பெறும் தானியத்திலிருந்து பெறப்படலாம். இவ்வாறான கடன்களில் ஏற்படும் நிதிமுதலீட்டையோ மற்றும் நிர்வாக செலவினங்களையோ மீளப்பெறுவதற்கு BRAC எவ்வித முயற்சியையும் மேற்கொள்ளாது. ஆகவே இச்செலவினங்களும் அத்துடனான ஏனைய சேவைகளும் மானியங்களினால் உதவித் தொகையாக வழங்கப்படுகின்றன. இலவசத் தானியச்சுற்றின் முடிவில் பங்குபற்றுநர்கள் பயிற்சியைப் பெற்றிருப்பதுடன், கடனை முகாமைத்துவம் செய்து ஏதாவது வகை தொழில் முயற்சி செயற்பாட்டை செய்யக்கூடியதாகவும், திரட்டப்பட்ட சேமிப்பை முதலீட்டு மூலதனமாக பயன்படுத்தக்கூடியதாகவும் இருக்கும். குழுநிலை பங்களிப்பின் மூலம் அவர்களுக்கு நம்பிக்கையும் ஏற்பட்டிருக்கும். இந்த நிலையில் பெரும்பாலான பங்குபற்றுநர்கள் வருமானத்தை உருவாக்கும் செயற்பாடுகளில் ஈடுபட ஆயத்தமாக இருப்பதுடன் வழமையான நுண்நிதி நிகழ்ச்சித் திட்டங்களிலும் வாடிக்கையாளராக ஆகியிருப்பர்.

IGVGDன் பெறுபேறுகள் சிறப்பானவையாக இருக்கின்றன. இந் நிகழ்ச்சித் திட்டமானது அது ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இதுவரை 1.6 மில்லியன் அநாதரவான பெண்களை அண்மித்துள்ளது. இத்தகைய பங்குபற்றுநர்களில் சுமார் 2/3 பேர் முற்றுமுழுமையான வறுமையிலிருந்து முன்னேறி நுண்நிதி வாடிக்கையாளர்களாக மாறி மேலும் நிவாரண உதவி தேவைப்படுகின்ற நிலைமைக்கு உள்ளாகவில்லை.

IGVGD வாடிக்கையாளர்கள் பற்றிய ஆய்வுகாட்டுவது யாதெனில் வாடிக்கையாளர் தொகை அதிகரிப்பதும் பொருள் ரீதியான சொத்துக்களின் அதிகரிப்புமாகும். (உதாரணமாக வீட்டுத் தோட்டக்காணிகள், நிலபுலங்கள், கட்டிடங்கள் மற்றும் போர்வைகள்.) இதுபோலவே கையேந்தும் நிலையில் குறைப்பும் காணப்பட்டன. வாடிக்கையாளர்களின் சுயகண்ணோட்டம் பற்றிய கற்கைகள் காட்டுவது யாதெனில் IGVGDன் பங்குபற்றுநர்கள் இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் இருந்ததன்பின் கூடுதலான நம்பிக்கையைக் கொண்டிருப்பதுடன் தம் வாழ்க்கை மேம்பட்டிருப்பதாகவும் நம்புகின்றனர்.[12]

IGVGD மாதிரியானது பங்களாதேஷில் மீளப் பிரதி செய்யப்படுகின்றது. அரசாங்கமும் WFP யும் ஏனைய 10 நுண்நிதி நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து இதே போன்ற தானியப் பொதியையும் நிதிசார் சேவைகளையும் 2003-04 காலப்பகுதியின்போது 44,000 பெண்களுக்கு வழங்குவதற்காக ஒன்றுசேர்ந்தன.

[12] Hashemi Syed, “ஆகவும் வறியவர்களை உள்ளடக்குவதற்காக நுண்நிதியையும் பாதுகாப்புவலை நிகழ்ச்சித் திட்டத்தையும் இணைத்தல்” அவதானக்குறிப்பு 21, வாஷிங்டன் D.C உலக வங்கி CGAP,2001 Marin,Imran and Rabeya Yasmin, “மிகவும் வறியவர்களுக்கான நிகழ்ச்சித் திட்டமொன்றின் சவால்களை உயர் மட்டத்தில் முகாமைத்துவம் செய்தல்.” *In scaling up Poorest Relations*, Washington DC, CGAP 2004

**அலெக்ஸ்சான்ரியா வியாபாரச்சங்கம்/எகிப்து : TSEP**

1988 இல் இலாப நோக்கமற்ற அமைப்பாக அலெக்ஸ்சான்ரியா வியாபாரச் சங்கம் (ABA) நிறுவப்பட்டது. இது இரு நுண்நிதி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துகின்றது – சிறிய மற்றும் நுண்நிதி செயற்றிட்டம் இதில் சராசரியான கடனின் அளவு 500 அமெரிக்க டொலர்கள் மற்றும் நுண்நிதி சிறுதொழில் முயற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் மலர்ச்சி (Blossoms) இது குறிப்பாக மிகவும் வறிய மக்களை இலக்காகக் கொண்டதுடன் அதிலும் பெண்களை நோக்காகக் கொண்டுள்ளது. இதில் கடன்கள் 25–125 அமெரிக்க டொலர்கள் வரையுண்டு. மார்ச் 2000 ஆம் ஆண்டு தாம் மிகவும் வறியவர்களாக இருப்பதனால் மலர்ச்சி நிகழ்ச்சித் திட்டத்தின் உறுப்பினர்களாக வர விருப்பமில்லாத அல்லது வரமுடியாத மக்களுக்காக சுயதொழில் வாய்ப்பு செயற்றிட்டத்தை (TSEP) ABA ஆரம்பித்தது. தர்ம நிதி நன்கொடைகளால் நிதியளிக்கப்பட்டு வியாபாரச் சமூகத்தினால் தமது சமயக்கடப்பாடுகளில் ஒருபகுதி யாக இதனை நடத்தி வருவதுடன் TSEP வேலைவாய்ப்பு மக்களுக்காக 50 அமெரிக்க டொலர்கள் மானியமாக வழங்கப்பட்டன.

பொருளாதார ரீதியாக நிலைக்கக்கூடிய தொழில் முயற்சியொன்றில் முழுநேரம் ஈடுபடுவது தொடர்பாக தாம் அக்கறையாக இருப்பதை நிகழ்ச்சித் திட்ட செய்பணியினருக்கு எடுத்துக்காட்டுவதற்கு வாடிக்கையாளருக்கு முதற் தவணைப் பணமாக 25 அமெரிக்க டொலர்கள் கொடுக்கப்படுகின்றன. இரண்டாவது தவணைக் கட்டணம் 25 டொலர்கள். அவர்கள் மூன்று மாத வியாபார நடவடிக்கைகளை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்து வியாபாரத்தை விரிவாக்கஞ் செய்வதற்கான மேலதிகக் கடப்பாடுகளை கொள்ளும்போது கொடுக்கப்படுகிறது. TSEP எவ்வாறு வடிவமைக்கப்பட்டுள்ளதெனில் வெற்றிகரமான பங்குபற்றுநர்கள் முதலில் மலர்ச்சி நிகழ்ச்சித் திட்டத்துக்கும் பின்னர் சிறிய மற்றும் நுண் சிறுதொழில் முயற்சி செயற் றிட்டத்துக்கும் என முன்னேறும் விதத்திலாகும்.

2005ம் ஆண்டின் பிற்பகுதிக்காலம் வரை 2,300 மானியங்களை TSEP வழங்கியது. இந்த வாடிக்கையாளர்களுள் 70% ஆனோர் தமது வியாபார நடவடிக்கைகளுடன் தொடர்ந்திருந்த போதிலும் 5% ஆனோரே மலர்ச்சிகள் நிகழ்ச்சித்திட்டத்தில் இணைந்து கொண்டனர். TSEP க்கு அமைய இதிலுள்ள பங்குபற்றுநர்கள் மலர்ச்சிகள் நிகழ்ச்சித்திட்டத்துக்கு முன்னேறுவது மிகவும் மந்தமாகவே உள்ளது. காரணம் கடன் வசதி, செய்பணியாளரைக் கொண்டு மானியங்களை வழங்கச் செய்வது வாடிக்கையாளருக்கு பலதரப்பட்ட செய்திகளை அனுப்பின. இதன் விளைவாக TSEP ஆனது இதற்கென வித்தியாசமான செய்பணியினரைக்கொண்ட புதிய அமைப்புக்களைப் பயன்படுத்தி சிறந்த தொடர்பாடலை வழங்கும் விதமாக விருத்தி செய்கின்றது. TSEP செய்பணியினர் வாடிக்கையாளருடன் சேர்ந்து வேலை செய்து மானியங்கள் எனப்படுபவை ஒரு தடவைக்கு மட்டுமே வழங்கப்படுபவை என்பதையும் எதிர்கால வியாபார தொழிற்பாடுகளுக்கு அணுகு வதற்கான கட்டாயமாக தேவைப்படுபவை என்பதை அவர்கள் விளங்கிக் கொள்வதையும் உறுதிப்படுத்தும்.

## பாடங்கள்

இந்த அவதானக் குறிப்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தனியாள் ஆய்வுகள் தற்போதுள்ள உதவித்தொகை வழங்கப்படும் பாதுகாப்புவலை நிகழ்ச்சித் திட்டங்களுக்கும் நுண்நிதி செயற்றிட்டங்களுக்குமிடையில் இணைப்புக்கள் எவ்வாறு ஏற்படுத்தப்படலாம் என்பதற்கான வழிகளைக் கூறும். அவை மிகவும் வறிய மக்களுக்கு நல்ல விளைவுகளை உருவாக்கக்கூடிய ஆதரவை எவ்வாறு ஏற்ற வகையில் ஒழுங்கு வரிசைப்படுத்தலாம் என்பதைக் காட்டும். உடனடியான நுகர்வுத் தேவைகளை நிறைவேற்றுவதற்காகவும் நுண்சொத்துக்களைக் கட்டியெழுப்புவதற்காக மானியங்களுடன் ஆரம்பித்தலானது இந்நிகழ்ச்சித் திட்டங்கள் பின்னர் திறன், பயிற்சி, வியாபார முகாமைத்துவப் பயிற்சி சேமிப்புச் சேவைகள் சில சமயம் வாடிக்கையாளரை நுண் சிறு தொழில் முயற்சிகளை நடத்த விடுவதற்காக சிறியளவான கடன் வசதிகள் என்பவற்றை வழங்கும். இந்த ஒழுங்குவரிசையில் வெற்றிகரமாக முன்னேறுவோர் வழமையான நுண்நிதி வாடிக்கையாளராக முன்னேறுவதற்கு ஆயத்தமாக இருப்பர்.
இவ்வாறான ஆதார நிகழ்ச்சிகள் ஊடாக எல்லோருமே வெற்றிகரமாக நகர்ந்து நுண்நிதிக்குள் முன்னேறுவர் என்பதற்கான

எத்தகைய உத்தரவாதமும் இல்லையெனினும் முறையாகக் கட்டமைக்கப்பட்ட ஆதார நிகழ்ச்சித்திட்டங்கள் நுண்நிதிக்கான ஒரு பாதை வழியாக அமையக்கூடிய சிறந்த ஆற்றலைக் கொண்டுள்ளன. ஆயினும் ஒன்றை மட்டும் நினைவிற் கொள்ள வேண்டும். மிகச் சிறந்த நிலைமைகளின்போதும் இத்தகைய நிகழ்ச்சித் திட்டங்களைப் பூர்த்தி செய்கின்ற 1/5 இலிருந்து 1/3 வரையான பெண்கள் அநாதரவான நிலைக்குள் உள்வாங்கப்பட்டு மேலும் பாதுகாப்பு வலை ஆதாரம் அவர்களுக்கு தேவைப்படும்.

இவ்வாறு இணைக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களிலுள்ள பாதுகாப்பு வலை மற்றும் நுண்நிதிப் பங்காளர்கள் தமக்கே உரித்தான ஒப்பீட்டு அனுகூலங்களைக் கொண்டுள்ளனர். பாதுகாப்பு வலையையும் நுண்நிதி நடவடிக்கைகளையும் கலப்பது இணைப்பாகக் காணப்படும் மாதிரியின் வினைத்திறனுக்கு குந்தகம் விளைவிக்கும் மானியங்களை விநியோகிப்பதற்கு தேவைப்படும் திறன்கள் நிலைபேறான நிதிசார் சேவைகளை வழங்குவதற்கு தேவைப்படுவனவற்றை விட வித்தியாசமானவை. சாத்தியப்படும் நுண்கடனானது கண்டிப்பாக மீளச் செலுத்தும் ஒழுங்குமுறை என்பதில் தங்கியுள்ளதுடன் கடன் கொடுக்கும் நிறுவனம் மானியங்களை வழங்கும் நிலையமாக இருப்பின் சுமுகமான நிலையேற்படுவது கடினமே.

பாதுகாப்பு வலை அல்லது மானிய நிகழ்ச்சித் திட்டங்கள் வினைத்திறனாக இருப்பதற்கு முதலில் இலக்குகளில் ஈடுபடுத்துவது தேவையாகும். பின்னர் வாடிக்கையாளர்களுக்குப் போதுமான ஆதரவு வழங்கப்படுவது உறுதிப்படுத்தப்பட வேண்டியுள்ளது. பாதுகாப்பு வலை நிகழ்ச்சித் திட்டத்தில் மிகச் சிறியளவான உதவித் தொகை வழங்கப்படும். “பயிற்சிக் கடன்களை” உள்ளடக்கி இருப்பின் இவ்வாறான கடன்கள் நுண்நிதி நிபுணர்களால் முகாமை செய்வதே சிறந்தது. அவர்கள் பங்குபற்றுகின்ற நுண்நிதி நிறுவனங்களின் வழமையான கடன் கொடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடாத வேறான நபர்களாக இருத்தல் வேண்டும். நிதிசார் நிறுவனங்களைப் பொறுத்தளவில் அவர்கள் முன்னேறுபவர்களை சேர்த்துக்கொள்வதற்காக வழி முறைகள் வைத்திருப்பதை உறுதிசெய்தல் வேண்டும். இதன்மூலம் இவர்கள் தொடர்ந்து தமது வழமையான வாடிக்கையாளர் குழுக்களின் வரிசையில் இணைந்து கொள்வர். வெற்றிகரமான நிகழ்ச்சித் திட்டங்கள் பின்வருவனவற்றை செய்யும் போக்கைக் கொண்டவை.

- மானியமளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை அல்லது சமூக பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்த பிரத்தியேகமான தொழில்சார் முகவரமைப்புகளில் தங்கியிருக்கும். இத்தகைய வகையான நிகழ்ச்சித்திட்டங்கள் நுண்நிதி நிறுவனத்தின் பிரதான செயற்பாட்டின் ஒரு பகுதியாக இல்லாதிருக்கும்.
- மானியங்கள் மற்றும் கடன்கள் தொடர்பாக கலப்பான செய்திகளை அனுப்பவேண்டாம். தமது நிகழ்ச்சித்திட்டத்திலுள்ள முன்னேறுபவர்கள் கண்டிப்பான நிதிசார் ஒழுங்குமுறைக்கு இசைவாக இருக்க வேண்டிய அவசியத்தை விளங்கிக்கொள்வதை நுண்நிதி நிறுவனம் உறுதி செய்தல் வேண்டும்.
- வாடிக்கையாளர்கள் தற்போதுதான் சமூக பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் சேர்த்துக் கொள்ளப்படுவதாயினும்கூட நிதிசார் சேவைகளை சேமிப்புக்களுடன் ஆரம்பிக்கவும். இதனால் நுண்சொத்துக்கள் கட்டியெழுப்பப்படுகின்றன. அதிர்ச்சிகளுக்கெதிராக தாங்கும் தடுப்பொன்றை வழங்குகின்றது. அத்துடன் ஒழுங்காக கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் கலாசாரத்துக்குள் பங்குபற்றுநர்களை பழக்கப்படுத்துகின்றது.
- சமூக பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு பகுதியாக செய்திறன் பயிற்சி, வியாபார ஆலோசனைகள் மற்றும் நிதிசார் நிறுவனங்கள் மீதான தகவல்கள் என்பவற்றை வழங்கவும்.
- இலகுவான பொருளாதார நடவடிக்கைகளாக, எளிமையான கடன்களுடன் ஆரம்பிக்கவும். சிறு தொழில் முயற்சிகள் சிறப்பாக தொழிற்பட ஆரம்பித்தவுடன் மரபுசார்ந்த நுண்நிதி நிறுவனத்தின் வாடிக்கையாளராக வருவதற்கு பங்குபற்றுநர்கள் ஆயத்தமாக இருக்கின்றனர்.
- நுண்நிதி நிறுவனச் சேவைகளுக்கு முன்னேறுவதற்குள்ள தொழில்முயற்சி சிந்தனை கொண்ட பங்குபற்றுநர்களை இனங்காணவும்.

இங்கு கலந்துரையாடப்பட்ட ஆய்வுகள் நுண்நிதிச் சேவைகளுக்கு முன்னேறக்கூடிய வெற்றி பெறுவதற்கான ஆற்றலையும் இதில் ஊறிப்போயுள்ள சில கடினமானவற்றையும் முன்னிறுத்திக் காட்டுகின்றன. மிகச் சிறந்த சந்தர்ப்பங்களிலும் கூட (உதாரணமாக BRAC – IGVGD, CARE, RMP) 1/5 – 1/3 வரையான பங்கு பற்றுநர்கள் மீளவும் அநாதரவான நிலைமைக்குள் மூழ்குவதுடன் பாதுகாப்பு வலை நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து தொடர்ச்சியான ஆதரவுகளையும் வேண்டிநிற்கின்றார்கள்.

முதலாவது மாதிரியில் பாதுகாப்பு வலையும் மானிய நிகழ்ச்சித் திட்டமும் நுண்நிதி நிகழ்ச்சித் திட்டத்துக்கான பங்குபற்றுநர்களை தயார்செய்வதற்கு பயிற்சி மற்றும் தகவல்களை வழங்குகின்றன. நுண்நிதி நிறுவனமானது பாதுகாப்பு வலையில் நன்கு செயலாற்றி முன்னேறுவோருக்கு நிதிசார் சேவைகளை வழங்கும். ஏற்கனவே வறிய வாடிக்கையாளருக்கென பொருத்தமான முறைமைகளை நுண்நிதி நிறுவனம் கொண்டிருக்குமாயின் இது சிறிதளவு மேலதிக வேலைகளை அல்லது ஆபத்துக்களை ஏற்படுத்தும் அதேவேளை இது ஒரு வெற்றி - வெற்றி மாதிரியாகும். இது நுண்நிதி நிறுவனம் பாதுகாப்பு வலை நிகழ்ச்சித் திட்டம் ஆகிய இரண்டுக்கும் நன்மையைத் தரும். இந்த வழியில் இளநிலையிலுள்ளதும் மற்றும் ஒப்பீட்டளவில் குறைவான உறுதியுள்ள நுண்நிதி நிறுவனம்கூட இந்த வழியில் சமூக பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டத்துடன் இணைந்துகொள்ளமுடியும்.

இரண்டாவது மாதிரி நுண்நிதி நிறுவனத்தின் மீது அதிகமான பளுவுள்ள கோரிக்கைகளை இடுகின்றது. குறிப்பாக ஆரம்ப செயற்பாடுகளுக்கு நிதியளிப்பதற்காக அநாதரவான சமூக பாதுகாப்பு பங்கேற்பாளர்களுக்கு உதவித்தொகை கடன்களின் வழங்கலுடன் ஒத்துழைப்பானது சம்பந்தப்படுகின்றது. அதனுடைய பிரதான நுண்கடன் வழங்கல் வியாபாரம் தொழிற்பாட்டு ரீதியாகவும் நிதிசார்ந்த நிலையில் திடமாகவும் நிலைபேறாகவும், ஒரு முதிர்ச்சியான நிலையிலும் இருந்தால் மட்டுமே நுண்நிதி நிறுவனம் இத்தகைய ஒத்துழைப்பை கருத்திற்கொள்ள வேண்டும்.

## முடிவு – கலந்துரையாடல் மற்றும் பரீட்சார்த்தத்தை நோக்கி

நுண்நிதியானது அண்மிப்பதற்கு கடினமாகவுள்ள மிகவும் வறிய மக்களே முக்கியமான பாதுகாப்பு முன்னெடுப்பின் அடிப்படைகளாக கவனத்திற் கொள்ளப்படவேண்டியுள்ளனர். – சமூக பாதுகாப்பு தந்திரோபாயத்தின் ஒரு பகுதியாக பாதுகாப்பு வலைகள் உள்ளன. ஆனால் நுண்நிதி கைத்தொழிலானது பொதுவாக சமூக பாதுகாப்பை அலட்சியப்படுத்தியுள்ளது அல்லது வேண்டுமென்றே அதிலிருந்து தூரவாகியுள்ளது. நுண்நிதி நடைமுறையாளர்கள் அடிக்கடி சமூக பாதுகாப்பை (குறிப்பாக பாதுகாப்பு வலைகள்) மானியங்களுடனும் உதவித்தொகையுடனும் கலந்து விடுகின்றனர். இவை சந்தைகளைச் சிதைத்து விடுவதுடன் நிலைபேறாக வருவதற்கான முயற்சிகளுக்குத் தடையாக இருக்கின்றன. மறுபுறத்தில் சமூக பாதுகாப்பு நிபுணர்கள் பொதுவாகவே நுண்நிதியுடன் கடன்தீர்க்க இயலாமையை ஒன்று சேர்த்துப் பார்ப்பதால் வறிய மக்கள் இக்கட்டுக்கு உள்ளாகும் நிலைமையும் அதிகரிக்கின்றது.

இவ்வாறான நம்பிக்கைகள், சில முக்கியமான புத்துருவாக்கச் சாத்தியங்களை ஆக்கபூர்வமாகத் தேடியறிவதற்குத் தடையாகவிருக்கின்றன. மிகவும் வறிய மக்களுக்கு அதன் சேவைகளின் தாக்கங்களை விரிவாக்க வேண்டுமாயின் நுண்நிதித்துறையானது புதிய அணுகு முறைகளைத் தேடியறிய வேண்டியுள்ளது. பாதுகாப்பு வலை நிகழ்ச்சித்திட்டங்கள் தம் வாடிக்கையாளர்களுக்கு உதவுவதற்காக சாத்தியமான நீண்டகால திட்டங்களை - முன்னேறிச் செல்லக்கூடிய தோற்றப்பாடு – உருவாக்கவேண்டியுள்ளது. இதில் நிதிசார் சேவைகளுக்கான அணுகுமுறையும் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும். மிகவும் கவனமாகக் கட்டமைக்கப்பட்ட ஒன்றிணைப்புக்களின் மூலம் நுண்நிதி மற்றும் சமூகப் பாதுகாப்பு நடைமுறையாளர்கள் இவ்வாறான இரு தேவைகளையும் வழங்கக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும். இவ்விரு துறைகளையும் சார்ந்தோர் தமது முன்னைய எண்ணக்கருக்களைக் கைவிட்டு, ஒருவரோடொருவர் கூடுதலாகக் கலந்துரையாடி பரஸ்பரம் நன்மை தரக்கூடிய, ஒன்றிணைப்பு முயற்சிகளில் ஈடுபட்டால் மாத்திரமே இத்தகைய ஆற்றல்கள் நல்ல முறையில் பயன்படுத்தக் கூடுமாக அமையும்.

**நுண்நிதி நிறுவனங்களின் முன்னேற்றத்தை வரிசைப்படுத்தல்.**



**GTZ என்பது**

ஜேர்மன் தொழினுட்பக்கூட்டுறவு (GTZ) என்பது சமஷ்டிக்கு உரித்தான ஒரு நிறுவனமாகும். நாம் நிலைத்திறனுள்ள அபிவிருத்திக்காக சர்வதேச ஒத்துழைப்பு எனும் புலத்தில் உலகளாவிய ரீதியில் தொழிற்படுகின்றோம். ஜேர்மன் அரசாங்கம் அதனுடைய அபிவிருத்தி குறிக்கோள்களை அடைவதற்கு ஆதரவளிப்பதே எமது குறிக்கோள் ஆகும். பூகோளமயமாகிய உலகில் அரசியல், பொருளாதார, சூழலுயிரியல், மற்றும் சமூக அபிவிருத்திக்கான சாத்தியமான முன்னோக்கிய சிந்தனையுடைய தீர்வுகளை நாம் வழங்குகின்றோம். சில சந்தர்ப்பங்களில் கடினமான நிலமைகளின்கீழ் வேலைசெய்வதனூடாக சிக்கலான சீர்திருத்தங்களையும் மாற்றல் செயலொழுங்குகளையும் நாம் ஊக்குவிக்கின்றோம். மக்களது வாழ்க்கையினை நிலைத்திறனான அடிப்படையில் முன்னேற்றுவது எமது கூட்டிணைக் குறிக்கோள் ஆகும்.

நுண்நிதித்துறை மேம்படுத்தல் திட்டம் (ProMiS) என்பது பொருளாதார கூட்டுறவுக்கும் அபிவிருத்திக்குமான ஜேர்மன் சமஷ்டி அமைச்சு(BMZ) சார்பாக GTZ இனால் அமுல்படுத்தப்படும் ஒரு பூரணமான நிகழ்ச்சித்திட்டமாகும்.

ProMis - Promotion of the Microfinance Sector
German Technical Cooperation
East Tower, Level 16,World Trade Centre,
Colombo 01,Sri Lanka
T +94 11 4963773/4
M +94 77 3647654
F +94 11 4622485
W www.microfinance.lk